**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்</u>**

முன்னிலை:- திருமதி. வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
(கூடுதல் பொறுப்பு)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை

***<u>இ.ம.எண். 380/2021 in அசல் வழக்கு எண்: 156/2015</u>***

தியாகராஜன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுலோச்சனா
2. முத்துகிருஷணன் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் கடந்த 17.09.2021-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பா.சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் உத்தரவு.

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்குடன் OS.14/2016 வழக்கையும் ஒரே நேரத்தில் (Simultaneous Trial) விசாரணை செய்ய அனுமதி அளித்து மேல் உத்தரவு செய்ய மனுதாரரான வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இந்த எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், மேற்படி இந்த நம்பர் அசல் வழக்கு மனுதாரர் இந்த பிரதிவாதிகள் பேரில் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் இந்த 2ம் பிரதிவாதியும் வழக்கறிஞர் வைத்து எதிர்கட்சி செய்து வருகிறார் என்றும், இந்த வழக்கில் வாதியாகிய தன் தரப்பில் PW1 முதன்மை விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு PW1 ஆகிய தன்னை குறுக்கு விசாரணை செய்ய வைக்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் இந்த எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி மனுதாரர் பேரில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் OS.14/2016

என்ற அசல் வழக்கு தாக்கல் செய்து வாதி தரப்பில் PW1 முதன்மை விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்து குறுக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி நம்பர் OS.14/16 வழக்கும் இந்த நம்பர் அசல் வழக்கிலும் நீதிமன்றமும், வழக்கு சொத்தும், தரப்பினர்களும் ஒன்று தான் என்பதாலும் கோரும் பரிகாரங்கள் வெவ்வேறானவை என்பதால் இந்த இரண்டு வழக்குகள் பிரச்சனை குறித்தும் நீதிமன்றம் ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து ஆய்வு செய்யும்போது இரண்டு வழக்குகளையும் ஒரே நேரத்தில் ஆய்வு செய்து நடத்தினால் மட்டுமே முழுமையான முரண்பாடற்ற தீர்ப்பாணையை பகரமுடியும் என்றும், எனவே இரண்டு வழக்குகளையும் ஒரே நேரத்தில் (similtaneous trial) விசாரணை செய்ய உத்திரவு செய்ய வேண்டியிருக்கிறது என்றும், அப்படிக்கு இல்லாவிடில் மனுதாரருக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

**<u>3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடிக்கு உரியது என்றும், மனுதாரர் மனுவில் வெளிப்படையாக கூறிய அம்சங்களை தவிர மற்ற அம்சங்களை இந்த எதிர்மனுதாரர் முழுமையாக மறுக்கிறார் என்றும், இந்த வழக்கிற்கான வழக்குமூலமும் மற்றும் அ.வ.எண்.14-2016 வழக்கிற்கான வழக்குமூலமும் ஒன்று கிடையாது வெவ்வேறானது என்றும், மேலும் இரண்டு வழக்கில் கேட்டுள்ள பரிகாரமும் வேறுபடுகிறது என்றும், இரண்டு வழக்கையும் தொடர்ச்சியாக விசாரணை செய்வது இந்த மனுதாரருக்கு அனுகூலமாக இருக்கும் என்றும், அதனால் இம்மனுவை காலம் கடந்து வழக்கு விசாரணையை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற தீய எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய 2ம் எதிர்மனுதாரர் வேண்டுகிறார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

**5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் மனுதாரர் இந்த பிரதிவாதிகள் பேரில் ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த வழக்கில் வாதியாகிய தன் தரப்பில் PW1 முதன்மை விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டு, மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய அசல் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி மனுதாரர் பேரில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் OS.14/2016 என்ற அசல் வழக்கு தாக்கல் செய்து வாதி தரப்பில் PW1 முதன்மை விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்து குறுக்கு விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி நம்பர் OS.14/16 வழக்கும் இந்த நம்பர் அசல் வழக்கிலும் நீதிமன்றமும், வழக்கு சொத்தும், தரப்பினர்களும் ஒன்று தான் என்பதாலும் கோரும் பரிகாரங்கள் வெவ்வேறானவை என்பதால் இரண்டு வழக்குகளையும் ஒரே நேரத்தில் ஆய்வு செய்து நடத்தினால் மட்டுமே முழுமையான முரண்பாடற்ற தீர்ப்பாணையை பகரமுடியும் என்றும், எனவே இரு வழக்குகளின் விசாரணையை ஒரே நேரத்தில் (Simultaneous Trial) நடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் இருவழக்குகளுக்கும் வழக்குமூலமும் வெவ்வேறானது மற்றும் இரண்டு வழக்கில் கேட்டுள்ள பரிகாரமும் வேறுபடுகிறது என குறிப்பிட்டிருந்தாலும் இருவழக்குகளின் வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்ததில், இருவழக்குகளின் தரப்பினர்களும், வழக்கு சொத்துக்களும் ஒன்றாகவே உள்ளது தெரிய வருகிறது. இரு வழக்குகளிலும் வெவ்வேறு பரிகாரங்கள் கோரப்பட்டிருந்தாலும், இருவழக்குகளிலும் joint trial நடத்த மனு கோரப்படவில்லை. இருவழக்குகளிலும் தரப்பினர்கள் ஒன்றாக உள்ளதாலும், அவர்களுக்கிடையே தீர்க்கப்பட பிரச்சினைகளும் ஒரேவிதமாக அமையப் பெற்றிருப்பதால் இருவழக்குகளிலும் ஒரே நேரத்தில் விசாரணையை ஒரே நேரத்தில் (Simultaneous Trial) நடத்துவதால் வழக்கில் மாறுபட்ட இரு தீர்வுகளையும், வீண் குழப்பத்தையும், நேர விரயத்தையும் தவிர்க்க இயலும். ஆகவே இம்மனுவை அனுமதிப்பதே சரியான தீர்வாகும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, இந்த அசல் வழக்கு 156-2015 வழக்கை, அசல் வழக்கு 14-2016 உடன் சேர்த்து ஒரே நேரத்தில் நடத்த (Simultaneous Trial) உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 24.09.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V.Geetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.(FAC)